வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 135 of 2018

வழக்கு சாட்சி - PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சரவணன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ராமசாமி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20.01.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை யின் தொடர்ச்சி:** **நாள் : 20.01.2026.**

1) ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டிய நபர் ஆவார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1)சம்பவம் நடைபெற்ற அன்று எனக்கு கல்லூரிஇருந்ததா என்றால் இருந்தது. கல்லூரி நேரம் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடம் எனது கல்லூரியில் இருந்து தோரயமாக 12 கிமீ இருக்கும் என்றால் இல்லை 2-3 கி.மீ இருக்கும். நான் பைக்கின் பின் புறம் அமர்ந்திருந்தால் எனக்கு முன்புறம் என்ன நடந்திருக்கும் என்பதாக தெளிவாக தெரியாது என்றால் இல்லை அவரை விட நான் உயரமாக இருந்ததால் எனக்கு சாலையின் பார்வை நன்றாக தெரியும். போலீசார் விசாரணையின் போது முன் பின்னாக மற்ற வாகனங்கள் என்ன வந்தது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2)விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவென் எனக்கு விபத்து ஏற்பட்ட சிலநாட்கள் கழித்துதான் தெரியும் என்றால் நான் விழும் போது வாகனத்தின் எண்ணை

பார்த்துவிட்டுதான் விழுந்தேன். வாகனத்தின் உள்ளே யார் யார் இருந்தார்கள் என்ற விவரம் என்றால் முன் இருக்கையில் இரண்டு நபர்கள் இருந்தார்கள் பின்னார் எவ்வளவு நபர்கள் இருந்தார்கள் என்ற விவரம் தெரியாது. நான் கீழே விழும் போது வாகனத்தின் எண்ணை பார்த்ததாக சொல்லியுள்ளேன் அவ்வாறு நான் பார்த்திருந்தால் வாகனத்தின் உள்ளே யார் யார் ஓட்டிய து யார் அமர்ந்திருந்தார்கள் என்ற விவரத்தைஎன்னால் சில நொடியில் பார்த்த சொல்ல இயலாது என்றால் இல்லை. ஆஜர் எதிரியை நான் பார்த்திருந்தால் அவர் என்ன நிறத்திலான உடை அணிந்திருப்பார் என்று என்னால் சொல்லியிரூக்க முடியும் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை வெள்ளை நிற ஆடை அணிந்திருந்தார். வெள்ளை நிற ஆடை அணிந்திருந்தார் என்ற விவரத்தை போலீசாரிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை. இருசக்கர வாகனத்தில் பயணிக்கும் போது நான் தலைகவசம் அணிந்திருந்தேனா என்றால் அணிந்திருந்தேன்.

3)வாகனத்தை முந்தி வந்த வாகனத்தின் விவரத்தை போலீசார் விசாரணையில் மற்றும் போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பேருந்தை முந்தி வ்நது தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன். பேருந்தின் நிறம் அந்த பேருந்து எந்த ஊருக்கு செல்கிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை அரசு பேருந்து. அரசு பேருந்தின் பதிவெண்ணை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. கார் விபத்து ஏற்பட்ட சமயத்தில் பேருந்தின் முன்புறமாக இருந்ததா என்றால் பேருந்தின் பின் புறமாக இருந்தது. விபத்து நடந்த அடுத்த நாளே போலீசார் விசாரணை நடத்தினார்களா என்றால் இல்லை நான் மருத்துவமனையில் சுய நினைவில் இல்லாததால் பத்து நாட்கள் கழித்து வாங்கினார்கள். நான் இரண்டு மாதம் மருத்துவ சிகிச்சையில் இருந்தேனா என்றால் 45 நாட்கள் இருந்தேன். போலீசாரிடம் சொல்லி விவரங்களுக்காகதான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

மருத்துவமனையில் நான் சுயநினைவில் இல்லை என்று சொல்லியுள்ளேன் அப்படி இருந்தால் நான் சில நொடிகளில் நான் வாகனத்தின் நிறம் மற்றும் பதிவெண் ஆகியவற்றை குறிபிட்டு சொல்ல முடியாது என்றால் இல்லை நான் சொன்னேன். இந்த விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் ஆஜர் எதிரியின் பெயர் போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளித்தது எல்லாம் பொய் என்றாலும் நானும் கார்த்திக் அதிவேகமாக இருசக்கர வாகனத்ததை இயக்கி வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல.

4) விபத்து சம்மந்தமாக காப்பீடு நிறுவனத்தில் இருந்து இழப்பீடு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். இறந்து போன கார்த்திக் என்பவரின் இழப்பீட்டு வழக்கிலும் நான் நீதிமன்றத்தில் சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரிதான். என் வழக்கிலும் கார்த்திக் வழக்கிலும் இழப்பீடு பெறப்பட்டதா என்றால் சரிதான். அன்றைய தினம் நான் கல்லூரி முடித்துதான் வந்தேன் என்று சொல்லியுள்ளேன் அவ்வாறு இருந்தால் வழக்கில் நான் கல்லூரி அடையாள அட்டையை போலீசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றால் ஓப்படைத்தேன். நான் சொன்ன நாள் சொன்ன தேதியில் ஆஜர் எதிரி விபத்தை ஏற்படுத்தவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.01.20 18:23:59 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.